# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

இரண்டாந்தவணைப் பரீட்சை - 2022

| தரம் :- 11 | வரலாறு | 33 / T / I | 1.00 மணித்தியாலம் |
|---|---|---|---|

**கவனிக்க:**

**i.** எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.
**ii.** 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
**iii.** உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
**iv.** அவ் விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கை மக்கள் தமது நாட்டு வரலாறு தொடர்பாகப் பெருமைப்படக்கூடிய விடயமாக இருப்பது யாது?
(1) கி.பி. 90 – 168 காலப்பகுதியில் தொலமியால் வரையப்பட்ட உலகப்படத்தில் இலங்கை குறித்துக் காட்டப்பட்டிருப்பது.
(2) இலங்கையின் வரலாறு தொடர்பாக வெளிநாட்டு அறிஞர்கள் நூல் எழுதியிருப்பது.
(3) இலங்கை வரலாறு ஒரே நூலில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருப்பது.
(4) கி.பி. நான்காம் நூற்றாண்டிலேயே இலங்கை வரலாறு எழுத்து வடிவம் பெற்றிருப்பது.

2. இலங்கையின் புராதன காலத்திற்குரிய இலக்கிய, சமயத்தகவல்கள், வம்சக் கதைகள் எழுதி வைக்கப்பட்ட சாசனம் எது?
(1) களிமண் தட்டு (Clay Tablets) (2) ஓலைச்சுவடி (Talipots)
(3) பப்பிரஸ்புல் (Papyrus) (4) மிருகத்தோல் (Animal Hides)

3. சீகிரி சுவர் ஓவியங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளக் கூடிய கலாசார வளர்ச்சி தொடர்பான தகவல்களாவன?
(1) பண்டைய இலங்கைப் பெண்களின் ஆடை, ஆபரணம், கூந்தல் அலங்காரம் என்பன பற்றி
(2) சீகிரி ஓவியங்களில் பயன்படுத்தப்பட்ட நிறங்கள் தொடர்பாக
(3) சீகிரி குன்றில் தீட்டப்பட்டுள்ள அப்ஸரஸ்கள் மின்னலையும், முகிலையும் குறிக்கின்றன என்பது பற்றி
(4) சீகிரி கி.பி 5ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிறந்த நகர நிர்மாணம் என்பது பற்றி

4. இலங்கையில் தாவர உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டி, உலோகப் பயன்பாட்டுடன் நிரந்தரக் குடியேற்றங்களை நிறுவிய காலம்?
(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
(2) முன் வரலாற்றுக் காலம்
(3) ஆரம்ப வரலாற்றுக் காலம்
(4) வரலாற்றுக் காலம்

5. சிகிரயா அலிகல, சிகிரியா பொத்தான, பிதுருன்கல போன்ற இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியிருப்புக்கள் அமைந்துள்ள சுற்றாடல் வலயம் எது?
(1) உயர்நில உலர் வலயம் (2) மலைநாட்டு இடை உலர் வலயம்
(3) ஈர வலயம் (4) தாழ்நில உலர் வலயம்

6. தென் மாகாணத்தில் 45 அடி ஆழத்தில் இரணைமடுப் படிவிற்குரிய சரளைக் கற்படிவு தொடர்பான ஆதாரங்கள் கிடைத்துள்ள இடம் எது?
(1) புந்தல வெல்லே கங்கொட (2) உடமல்ல
(3) பதிராஜவெல (4) அத்தனகொட அலுலெனை

7. கிராமங்களில் வீடுகளுக்குத் தலைமை தாங்கியவருக்கு வழங்கப்பட்ட பெயர்?
(1) கிருகபதி (2) கமிக
(3) பருமக (4) கஹபதி

8. கி.மு. 700 - 450 காலகட்டத்திற்குரியதாகக் கருதப்படும் இப்பன்கட்டுவ கல்லறை மயானத்தினைப் பயன்படுத்தியவர்களாகக் கருதப்படுபவர்கள்?
(1) பருமக (2) கிராமிக (3) கிருகபதி (4) கமிக

9. கி.மு. 900 ஆண்டளவில் இலங்கையின் உலர் வலயத்தில் குடியிருப்புக்களின் பரம்பலைத் தீர்மானித்த காரணி?
(1) விகாரை (2) சிறுகுளம்
(3) வளமான மண் (4) தரைத்தோற்ற வேறுபாடு

10. இலங்கையில் முதன் முதலாக துட்டகைமுனு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் அதிகாரத்தின் மத்திய மயப்படுத்தல் என்ற செயற்பாட்டினை முழுமைப்படுத்திய இலம்பகர்ண வம்ச ஆட்சியாளன்?
(1) முதலாம் கஜபாகு (2) தாதுசேனன்
(3) முதலாம் சேனன் (4) வசபன்

11. இலங்கையின் புராதன வைத்தியத்துறைக்குப் பங்களிப்புச் செய்த மன்னர்களும் அவர்களின் வைத்தியப் பணிகளும் நிரல் I நிரல் II எனத் தரப்பட்டுள்ளன. நிரல் I க்கு ஏற்ப நிரல் II தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I மன்னர்கள் | நிரல் II பணிகள் |
|---|---|
| 1. புத்ததாஸன் | A. உபசக்கரோகநாச என்ற வைத்தியசாலையை அமைத்தல். |
| 2. ஐந்தம் மகிந்தன் | B. பிரசவ விடுதிகளை அமைத்தல். |
| 3. நான்காம் காசியப்பன் | C. நாடெங்கும் வைத்தியசாலைகளை அமைத்தல். |
| 4. முதலாம் உபதிஸ்ஸ | D. வைத்தியசாலைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல். |

(1) CDAB (2) DCAB (3) BACD (4) CABD

12. இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள புராதன வர்த்தக நகரம்?
(1) ஜம்புகோளப்பட்டினம்
(2) மகாதித்த
(3) கதுருகொட
(4) பல்லவங்க

13. மத்திய மாகாணத்தில் தெஹிகஹ அலகந்த பகுதியில் இரும்புச் சூளை எரிவதற்குத் தேவையான வளி பெற்றுக் கொள்ளப்பட்டது?
(1) இயற்கையான காற்று மூலம்
(2) மரங் என்ற மரத்தின் மூலம்
(3) லிமனைட், ஹெமடைட் என்ற கற்கள் மூலம்
(4) ஊதுளை என்னும் கருவி மூலம்

14. சீகிரியா நீர்ப்பூங்காவில் மேலெழும் தண்ணீரின் உயரத்தில் வேறுபாடு ஏற்படுவதற்கு பின்பற்றப்பட்ட நுட்பமுறை?
(1) பொருத்தப்பட்ட கருங்கல் துவாரங்களின் விட்டத்தின் அளவுகளில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.
(2) வாய்க்கால்களின் சரிவு குறைவாக அமைக்கப்பட்டது.
(3) நீரின் வேகம் குறைக்கப்பட்டது.
(4) வாய்க்கால்கள் சுருள் வடிவில் அமைக்கப்பட்டது.

15. நீரலைச் சக்தியின் செயற்பாட்டினைக் கவனத்தில் எடுத்து எமது முன்னோர்கள் விஞ்ஞான ரீதியாகச் சிந்தித்து உருவாக்கிய குளத்தின் உறுப்பு?
(1) கலிங்கல் தொட்டி (2) குளக்கட்டு
(3) அலைதாங்கி (4) ஈரக்கலிங்கல்

16. முற்காலத்தில் இலங்கையிலிருந்த துறைமுகங்களில் சுங்க வரி அறவிடப்பட்டது என்பதற்கான சான்று யாது?
(1) துறைமுகங்களிற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் வெளிநாட்டு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பது.
(2) இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தது.
(3) தேவநம்பியதீச மன்னன் வர்த்தகத் தொடர்பின் விருத்தியில் அதிக ஆர்வம் காட்டியது.
(4) இந்து சமுத்திரத்தின் வர்த்தக மையம் மேற்கிலிருந்து கிழக்கிற்கு மாறியது.

**பின்வரும் அட்டவணையில் A யிலிருந்து F வரையுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 17 ஆம், 18 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| இராசதானி | கைப்பற்றியவர் | அரசன் ஆக முடிசூடிய பின் பெயர் |
|---|---|---|
| A- யாழ்ப்பாணம் | C - அம்புலுகல குமாரன் | E- எட்டாம் வீர பராக்கிரமபாகு |
| B- மலைநாடு | D- சப்புமல்குமாரன் | F- ஆறாம் புவனேகபாகு |

17. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொண்டவரையும், அவர் அரசனான பின் சூடிக்கொண்ட பெயரையும் தரும் விடை யாது?
(1) C,E (2) D,F (3) C,F (4) D,E

18. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் அம்புலுகல குமாரன் கைப்பற்றிய இராசதானியையும், மன்னனான பின் அவரது பெயரையும் தரும் விடையைத் தெரிக?
(1) B,E (2) A,F (3) A,E (4) B,F

19. முதலாம் புவனேகபாகு மன்னனால் அனுப்பப்பட்ட வர்த்தகத் தூதுக் குழுவினர் வரவேற்கப்பட்ட எகிப்திய நகரம் எது?
(1) கீசா (2) பெம்பீஸ் (3) கெய்ரோ (4) அலெக்சான்றியா

**கீழே கண்டி இராச்சியத்துடன் தொடர்புடையவர்களின் பெயர்கள் A–F வரை தரப்பட்டுள்ளது. அவற்றைப் பயன்படுத்தி 20 – 22 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A- ஜயவீர பண்டார
B- வீரசுந்தர பண்டார
C- யமசிங்க பண்டார
D- சேனாசம்மத விக்கிரமபாகு
E- கரலியத்த பண்டார

20. கோட்டை இராச்சியத்தில் "விஜயபாகு கொள்ளை" இடம்பெற்ற போது மாயாதுன்னைக்கு உதவியவன்?
(1) B (2) A (3) C (4) E

21. முதலாம் இராஜசிங்க மன்னனுக்கு ஆதரவு வழங்கிய கண்டி இராச்சிய பிரதானி?
(1) A (2) C (3) D (4) B

22. போர்த்துக்கேயரிடம் சரணடைந்து கிறீஸ்தவ சமயத்திற்கு மதம் மாறி டொன்பிலிப் எனத் தனது பெரை மாற்றிக் கொண்டவன்?
(1) E (2) D (3) B (4) C

23. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய மூன்று ஐரோப்பிய நாட்டவர்களுடனும் தொடர்புபட்ட இலங்கையின் இராசதானி எது?
(1) தம்பதெனியா (2) கம்பளை
(3) கண்டி (4) பொலன்னறுவை

24. நிரல் I இல் மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளும் நிரல் II இல் அவற்றுடன் தொடர்புடையவர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளது. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II ஐத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. அச்சு இயந்திரம் கண்டறிதல் | A- ஐசக் நியூட்டன் |
| 2. புவி கோள வடிவம் | B- நிக்கலஸ் கொப்பனிக்கஸ் |
| 3. புவி ஈர்ப்பு விசை | C- கலிலியோகலிலி |
| 4. தொலைநோக்கி கண்டறிதல் | D- கூட்டன் பேர்க் |

(1) DBAC (2) BDAC (3) ACBD (4) DABC

25. போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண இராச்சிய ஆட்சியாளன் சங்கிலி மன்னனுக்கும் இடையே மோதல் ஏற்பட்டமைக்கான காரணங்களில் ஒன்று?
(1) சங்கிலி மன்னன் சீதவாக்கை மன்னனுடன் தொடர்பு கொண்டமை.
(2) போர்த்துக்கேயரின் வர்த்தக கப்பலுக்கு தடை விதித்தமை.
(3) கத்தோலிக்க மதத்தினைப் பரப்ப உடன்பட்டமை.
(4) கத்தோலிக்க மதப்பரவலுக்கு சைவகுருமார் ஆதரவு வழங்கியமை.

26. முதலாம் விமலதர்மசூரியனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே யுத்தம் நடைபெற்ற இடங்கள் முறையே?
(1) முல்லேரியா, ரந்தெனிவெல
(2) ரந்தெனிவெல, கன்னொறுவ
(3) தந்துரே, ரந்தெனிவெல
(4) தந்துரே, பலன

27. கண்டி இராச்சியம் கரையோரப் பகுதிகளை இழப்பதற்கு காரணமாக இருந்த ஒப்பந்தம் எது?
(1) 1815 ஆம் ஆண்டு ஒப்பந்தம்
(2) 1848 ஆம் ஆண்டு ஒப்பந்தம்
(3) 1766 ஆம் ஆண்டு ஒப்பந்தம்
(4) 1638 ஆம் ஆண்டு ஒப்பந்தம்

28. 18 ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக ஐரோப்பாவில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட நாடு எது?
(1) பிரான்ஸ் (2) பிரித்தானியா (3) ஜேர்மனி (4) இத்தாலி

29. ஹம்பிறிடேவி என்பவரால் பாதுகாப்பு விளக்கு கண்டறியப்பட்ட பின்பு ஏற்பட்ட மாற்றம் யாது?
(1) நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை வெளியே கொண்டு வருவதற்கும் சிறுவர் உழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.
(2) இரும்பை உருக்குவதற்கு நிலக்கரி பணன்படுத்தப்பட்டது.
(3) நிலக்கரிச் சுரங்கங்கள் வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்டன.
(4) ஆழமான அகழ்வின் போது நிலக்கரிச் சுரங்கங்களில் விசவாயு வெளியேறியது.

30. 1811 ஆம் ஆண்டு பெருந்தெருக்களை அமைக்கும் முறையைக் கண்டறிந்தவர் யார்?
(1) ஜோர்ஜ் ஸ்டீவன்சன் (2) ரொபட்புல்டன்
(3) டெம்லர் (4) ஜோன் மெக்கடம்

31. இந்தியாவின் கிழக்கு கரையோரத்தில் ஆங்கிலேயரின் கடற்படைப் பலத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவிய இலங்கையின் துறைமுகம் எது?
(1) மன்னார் (2) திருகோணமலை
(3) சிலாபம் (4) காங்கேசந்துறை

32. இலங்கையின் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் பிரதான நோக்கமாக இருந்த விடயம் யாது?
(1) இலாபத்தினைச் சப்பாதித்துக் கொள்ளுவது
(2) மதத்தைப் பரப்புவது
(3) கண்டி இராட்சியத்தைக் கைப்பற்றுவது
(4) இலங்கை முழுவதையும் ஆட்சி செய்வது

33. இலங்கையில் பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட முதலாவது ஆளுனர்?
(1) றொபேட் பிறவுண்றிக் (2) வில்லியம் கிரகொரி
(3) தோமஸ் மெயிட்லன்ட் (4) பிரட்டிக் நோர்த்

34. கண்டி இராட்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றுவதற்கான பின்னணியை உருவாக்கிய பிரித்தானிய ஆளுனர் யார்?
(1) பிரட்டிக் நோர்த் (2) றொபேட் பிரவுண்றிக்
(3) தோமஸ் மெயிட்லன்ட் (4) ஹென்றி வோட்

35. கண்டி இராட்சியத்தின் இறுதி மன்னன் யார்?
(1) 2 ஆம் இராஜசிங்கன் (2) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

கீழே A தொடக்கம் F வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 36, 37, 38 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A. உதயபாணு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது
டீ. கொழும்பில் சாஹிராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
ஊ. பௌர்ணமி தினத்தை விடுமுறையபக பிரகடனப்படுத்தப்பட்டது.
னு. சைவபரிபாலன சபைகள் உருவாக்கப்பட்டன
நு. பிரம்ம ஞானசங்கம் ஆரம்பிக்கப்பட்டத
கு. முஸ்லீம் நேசன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டமை

36. ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலருடன் தொடர்புடைய கூற்றுக்களைக் கொண்ட விடைகள் எவை?
(1) A,D (2) D,C (3) C,E (4) B,D

37. சோர் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களோடு தொடர்புடைய விடைகள் எவை?
(1) E,D (2) D,C (3) C,E (4) B,D

38. எம். சித்திலெப்பை அவர்ளுடன் தொடர்புடைய விடைகள் எவை?
(1) C,D (2) B,F (3) A,F (4) B,E

39. இலங்கை ஐந்து மாகாணங்களாக பிரிக்கப்பட வேண்டும் என்ற சீர்திருத்தத்தினை முன்வைத்த அரசியல் யாப்பு எது?
(1) டொனமூர் அரசியல் யாப்பு (2) மனிங் அரசியல் யாப்பு
(3) சோல்பரி அரசியல் யாப்பு (4) கோல்புறூக் அரசியல் யாப்பு

40. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
(1) D.S சேனநாயக்கா (2) டட்லி சேனநாயக்கா
(3) S.W.R.D பண்டாரநாயக்கா (4) R. பிரேமதாச